# மூன்றாம் திருப்புதல் தேர்வு - 2023
## பொருளியல்

வகுப்பு 12

நேரம் 3.00 மணி பகுதி - அ தேர்வு எண்:

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

மதிப்பெண்கள் : 90

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 20 x 1 = 20

1. பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை.
அ. தேவை மற்றும் அளிப்பு ஆ. சொத்து மற்றும் நலம்
இ. உற்பத்தி மற்றும் நுகர்வு இ. நுண்ணியல் மற்றும் பேரியல்

2. நவீன பொருளியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
அ. காரல் மார்க்ஸ் ஆ. ஆடம் ஸ்மித் இ. ஜே.எம்.ஜீன்ஸ் ஈ. ராக்னர் பிரிக்ஸ்

3. _______ ஆல் தேசிய வருவாயை வகுத்தால் தலாவீத வருமானம் கண்டறியலாம்.
அ.செலவு ஆ. உற்பத்தி இ. GNP ஈ. நாட்டின் மக்கள் தொகை.

4. J.B. சே ஒரு __________
அ. புதிய பொருளியலாளர் ஆ. புதிய தொன்மை பொருளியலாளர்
இ. தொன்மை பொருளியலாளர் ஈ. நவீன பொருளியலாளர்

5. சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது
அ. Y / C ஆ. C / Y இ. C + Y ஈ. C x Y

6. மிகைப் பெருக்கி என்ற கருத்தை முதன்முதலில் பயன்படுத்தியவர்
அ. கீன்ஸ் ஆ. J.R.ஹிக்ஸ் இ. R.G.D ஆலன் ஈ. கான்

7. ஆர்.பி.ஐ-ன் தலைமையகம் அமைந்துள்ள இடம்
அ. மும்பை ஆ. பெங்களூரு இ. டில்லி ஈ. சென்னை.

8. ஒரு வணிக வங்கி செய்யும் சேவை
அ. வைப்புகளை ஏற்றுக்கொள்வது ஆ. கடன் வழங்குவது
இ. (அ) மற்றும் (ஆ) ஈ. மேற்சொன்ன எதுவும் இல்லை.

9. இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் என்பது ____________
அ. உள்வாணிகம் ஆ. உள்நாட்டுவாணிகம்
இ. வெளிவாணிகம் ஈ. எவையும் இல்லை.

10. நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?
அ. ஜூலை 1992 ஆ. ஜூலை 1962 இ. ஜூலை 1972 ஈ. ஜூலை 1982.

11. பண மாற்று வீதம் நிர்ணயிக்கும் சந்தை
அ. மூலதன சந்தை ஆ. பண சந்தை
இ. அந்நிய செலாவணி சந்தை ஈ. பங்கு சந்தை

12. அயல்நாட்டுச் செலுத்துநிலை உள்ளடக்கிய இனங்கள்.
அ. பண்ட வாணிபம் மட்டும் ஆ. புலனாகும் பொருட்கள் மட்டும்
இ. புலனாகாத பொருட்கள் மட்டும் ஈ. அ மற்றும் ஆ

13. புதிய மேம்பாட்டு வங்கி இந்த அமைப்புடன் தொடர்புடையது.
அ. சார்க் ஆ. பிரிக்ஸ் இ. ஆசியான் ஈ. டபிள்யூ.டி.ஓ.

14. நவீன அரசு எனப்படுவது
அ. நலம் பேணும் அரசு ஆ. தலையிடா அரசு
இ. காவல் அரசு ஈ. மேல்மட்டத்தில் உள்ளவர்களின் அரசு.

15. பின்வரும் எது உலக வெப்ப மயமாக்குதலுக்கு காரணம்?
அ. ஆக்ஸிஜன் ஆ. பூமியின் ஈர்ப்பு விசை
இ. மையநோக்கு விசை ஈ. வெப்பநிலை அதிகமாதல்

16. அமில மழை ______________________ விளைவுகளில் ஒன்று
அ. நிலமாசு ஆ. காற்றுமாசு இ. ஒலிமாசு ஈ. நீர்மாசு

17. இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு ________________
அ. 1948 ஆ. 1950 இ. 1951 ஈ. 1947

18. நிதி ஆயோக்கின் தலைவர்
அ. துணைக் குடியரசுத் தலைவர் ஆ. பிரதமர்
இ. நிதி அமைச்சர் ஈ. குடியரசுத் தலைவர்

19. கேள்வித்தாள் மூலம் புள்ளி விவரம் திரட்டப்படுவது ________________
அ. முதல்நிலை விவரம் ஆ. இரண்டாம் நிலை விவரம்
இ. தொகுக்கப்பட்ட விவரம் ஈ. வெளியிடப்பட்ட விவரம்

20. இரண்டாம் நிலை விவரங்களுக்கான ஆதாரம் ____________________
அ. வெளியிடப்பட்ட விவரங்கள் ஆ. வெளியிடப்படாத விவரங்கள்
இ. மேற்சொன்ன இரண்டில் ஒன்று ஈ. அ மற்றும் ஆ

## பகுதி - II

7 x 2 = 14

**II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி:**
**வினா எண் 30-க்கு கட்டாயம் விடையளி.**

21. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.
22. GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.
23. ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது?
24. "நுகர்வு நாட்டம்" என்றால் என்ன?
25. நெகிழிப் பணம் என்றால் என்ன? உதாரணம் தருக?
26. வணிக வங்கிகள் என்பதனை வரையறுக்கவும்?
27. ஆசியானின் ஏதேனும் இரண்டு நோக்கங்களைக் கூறுக?
28. உலக வெப்பமயமாதல் என்பதை வரையறுக்கவும்?
29. பொது நிதி - வரையறுக்கவும்?
30. புள்ளியியல் என்றால் என்ன?

## பகுதி - III

7 x 3 = 21

**III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.**
**வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை எழுதுக?
32. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக?
33. பெருக்கியின் வகைகளை குறிப்பிடுக?
34. உலேகப்பணம் பற்றி ஓர் குறிப்பு வரைக?
35. இந்திய தொழில் நிதிக் கழகத்தின் பணிகளைக் குறிப்பிடுக?
36. சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக?
37. வரிவிதிப்பு விதிகளை எழுதுக?
38. இ-கழிவுகள் என்பதன் பொருள் தருக?
39. வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுபடுத்துக?
40. புள்ளியியலின் பணிகள் யாவை?

## பகுதி - IV

7 x 5 = 35

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

41. முதலாளித்துவம், சமத்துவம் மற்றும் கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை விளக்குக?
**(அல்லது)**
தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரிக்கவும்?

42. தொன்மைக் கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு இவற்றின் வேறுபாடுகளை விளக்குக?
**(அல்லது)**
முடுக்கி இயங்கும் விதத்தினை விவரிக்கவும்?

43. பணவீக்கத்திற்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் யாவை?
**(அல்லது)**
நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக?

44. பணமாற்று வீதம் எவ்வாறு நிர்ணயமாகிறது என்பதை உதாரணத்துடன் விளக்குக?
**(அல்லது)**
குறிப்பு எழுதுக (I) சார்க் (II) பிரிக்ஸ்

45. பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதி?
**(அல்லது)**
வணிக சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க?

46. உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க?
**(அல்லது)**
அரசுச் செலவு அதிகாரிப்பதற்கான காரணங்கள் யாவை?

47. மறைமுக வரிகளின் நன்மைகள் யாவை?
**(அல்லது)**
புள்ளியியலின் இயல்பு மற்றும் எல்லைகளை விளக்குக?